பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்
21 NOV 2024
சென்னை-5

8

ஆணையர் / பிந

104683/24

**சுருக்கம்**

அறிவிப்புகள் - 2024-25ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் - பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - கல்வி - விடுதிகள் - 19 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தி தொடங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை

**அரசாணை (நிலை) எண். 90** — **நாள் : 28.10.2024**
**குரோதி, ஐப்பசி -11,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**

**படிக்கப்பட்டது:**

1. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.சி1/2376/2024, நாள் 01.07.2024, 12.07.2024 மற்றும் 03.10.2024.
2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.சி1/3097/2024, நாள் 22.07.2024 மற்றும் 15.10.2024.

******

**ஆணை:**

2024-25-ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் "கல்லூரி விடுதிகளின் தேவையை கருத்தில் கொண்டு 1400 மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் 19 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பள்ளி விடுதிகள் 1 கோடியே 96 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோரின் கடிதங்களில் விடுதிகளில் குறைவான மாணவ/மாணவியர் சேர்க்கையினைக் கருத்திற்கொண்டு தேவைக்கேற்ப பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படுவதாகவும் அதன்படி இணைப்பு-I-இல் உள்ள 19 பள்ளி விடுதிகளை 19 கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தலாம் என தெரிவித்துள்ளனர்.

3. 19 பள்ளி விடுதிகள், கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும் பட்சத்தில் ஏற்கனவே இவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் 10 இடைநிலை காப்பாளர் பணியிடங்களைப் போதக காப்பாளர் பணியிடங்களாக நிலை உயர்த்தவும், புதிதாக 7 பணியிடங்களைத் தோற்றுவிக்கவும், சம்பந்தப்பட்ட ஆணையர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும், புதியதாகத் தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கு நிதியளவில் இணையான பணியிடங்கள் சரண் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

4. கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படவுள்ள 19 பள்ளி விடுதிகளை இணைப்பு-I-இல் குறிப்பிட்டுள்ளவாறு அதே இடத்தில் / அதே மாவட்டத்தில் வேறொரு பகுதியில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்பட்டு தொடங்கப்பட உள்ளதெனவும் நிலை உயர்த்தப்படவுள்ள 19 பள்ளி விடுதிகளில் ஒரு சில விடுதிகள் பாலர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

5. மேலும், நிலை உயர்த்தப்படுவதால், பள்ளி விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையை விட கல்லூரி விடுதிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்படும் நிலையில், கூடுதல் இடங்களுக்கு உணவுக் கட்டணம், சிறப்பு உணவு கட்டணம், பல்வகை செலவினம் மற்றும் இவ்விடுதிகளுக்கு செம்மொழி நூலகம் மின் நூலகம், தொலைபேசி இணைப்பு, ஜமக்காளம், CCTV கேமரா மற்றும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவை வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

6. 19 பள்ளி விடுதிகளை, கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்துவதால் அரசுக்கு ஏற்படக் கூடிய தொடர் செலவினம் ரூ.2,16,63,520/- மற்றும் தொடரාச் செலவினம் ரூ.44,03,000/- என மொத்த செலவினம் ரூ.2,60,66,520/-ஐ உரிய கணக்கு தலைப்பின் கீழ்

ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடுமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

7. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோரின் கருத்துருக்களை அரசு கவனமுடன் பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன :-

i. 19 பள்ளி விடுதிகளை நிலை உயர்த்தி 19 கல்லூரி விடுதிகளாக இணைப்பு-I-இல் உள்ளவாறு அதே இடங்களில் / தேவையுள்ள வேறு இடங்களில் தொடங்கவும், அதில் குறிப்பிட்டவாறு, மாணவ/மாணவியர் எண்ணிக்கையை ஒப்பளிப்பதற்கும் ஒரு சில விடுதிகளில் பாலர் மாற்றம் செய்வதற்கு அனுமதியும்,

ii. இணைப்பு-II-இல் உள்ளவாறு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 10 இடைநிலை காப்பாளர்/ காப்பாளினி பணியிடங்களை போதக காப்பாளர்/காப்பாளினி பணியிடங்களாகத் தரம் உயர்த்துவதற்கு அனுமதியும்,

iii. இணைப்பு-III-இல் உள்ளவாறு 7 பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிப்பதற்கு அனுமதியும்,

iv. இணைப்பு-IV-இல் குறிப்பிட்டுள்ள 7 பணியிடங்களை சரண் செய்வதற்கு அனுமதியும்,

v. பாலர் மாற்றம் செய்யப்படும் விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள், அந்தந்த பாலின விடுதிகளுக்கேற்ப பணியிடங்களும் பாலர் மாற்றம் செய்வதற்கு அனுமதியும்;

vi. இவ்வாறு 19 பள்ளி விடுதிகளை, கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்துவதால் ஆண்டொன்றுக்கு ஏற்படக்கூடிய தொடர் செலவினம் ரூ.2,16,63,520/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.44,03,000/- என மொத்த செலவினம் ரூ.2,60,66,520/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து ஐந்நூற்று இருபது மட்டும்) நிதி ஒப்பளிப்பும், வழங்கப்படுகிறது.

8. மேலே பத்தி 7-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் ரூ.1,48,53,480/-</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| தொடர் செலவினம் | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30101 | 27,85,200 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277-AA-30301 | 14,52,600 |
| | 01 | அகவிலைப்படி | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30106 | 40,200 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30102 | 10,800 |
| | 02 | மருத்துவப்படி | | |
| 5. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-03-277-AA-36709 | 68,80,000 |
| | 09 | ஏனையவை | | |
| 6. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30501 | 97,680 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 7. | 318 | பராமரிப்பு | 2225-03-277-AA-31801 | 26,400 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA-32401 | 9,40,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| **மொத்தம் (அ)** | | | | **1,22,32,880** |
| தொடராச் செலவினம் | | | | |
| 9. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225-03-277-AA-31901 | 5,90,000 |
| | 01 | வாங்குதல் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | 334 | ஏனைய செலவுகள் | 2225-03-277-AA-33402 | 5,50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிற்காகும் புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் | | |
| 11. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30501 | 55,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 12. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225-03-277-AA-37601 | 8,80,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 13. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA-32401 | 5,45,600 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| மொத்தம் (ஆ) | | | | 26,20,600 |
| பெரு மொத்தம் (அ + ஆ) | | | | 1,48,53,480 |

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் ரூ.95,58,960/-</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – BC – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| தொடர் செலவினம் | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-BC-30101 | 28,08,000 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277-BC-30301 | 14,52,000 |
| | 01 | அகவிலைப்படி | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277- BC -30106 | 40,800 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 301 | சம்பளங்கள் | 2225-03-277- BC -30102 | 14,400 |
| | 02 | மருத்துவப்படி | | |
| 5. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-03-277- BC -36709 | 30,67,000 |
| | 09 | ஏனையவை | | |
| 6. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225- 03- 277- BC -30501 | 62,160 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 7. | 318 | பராமரிப்பு | 2225- 03- 277- BC -31801 | 16,800 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277- BC -32401 | 5,00,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| மொத்தம் (அ) | | | | 79,61,160 |
| தொடராச் செலவினம் | | | | |
| 9. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225- 03- 277- BC-31901 | 3,80,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 10. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277- BC-32401 | 2,72,800 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 11. | 334 | ஏனைய செலவுகள் | 2225- 03- 277- BC-33402 | 3,50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிற்காகும் புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் | | |
| 12. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03- 277- BC -30501 | 35,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225-03-277-BC-37601 | 5,60,000 |
| | 01 | வாங்குதல் | | |
| மொத்தம் (ஆ) | | | | 15,97,800 |
| பெரு மொத்தம் (அ + ஆ) | | | | 95,58,960 |

சீர்மரபினர் நல விடுதிகள் ரூ.16,54,080/-

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 80 – பொது – 101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் - மாநிலச் செலவினங்கள் – AF – சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| தொடர் செலவினம் | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225-80-101-AF-30101 | 3,39,600 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-80-101-AF-30301 | 1,81,800 |
| | 01 | அகவிலைப்படி | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-80-101-AF-30106 | 4,800 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-80-101-AF-36709 | 8,32,000 |
| | 09 | ஏனையவை | | |
| 5. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-80-101-AF-30501 | 8,880 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 6. | 318 | பராமரிப்பு | 2225-80-101-AF-31801 | 2,400 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | |
| 7. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-80-101-AF-32401 | 1,00,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| மொத்தம் (அ) | | | | 14,69,480 |

| | | | | |
|---|---|---|---|---|
| தொடராச் செலவினம் | | | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-80-101-AF-32401 | 49,600 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 9. | 334 | ஏனைய செலவுகள் | 2225-80-101-AF-33402 | 50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிற்காகும் புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-80-101-AF-30501 | 5,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 11. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225-80-101-AF-37601 | 80,000 |
| | 01 | வாங்குதல் | | |
| **மொத்தம் (ஆ)** | | | | **1,84,600** |
| **பெரு மொத்தம் (அ + ஆ)** | | | | **16,54,080** |

9. மேலே, பத்தி 7-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான நிதியொதுக்கம் ரூ.2,60,66,520/-, 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2024-25 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே, பத்தி 7-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 7-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2024-25 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/ இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி.மி.பி.(ம)சி.ந/வ.செ.பொ.-I]த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.7767487/ நிதி (பி.மி.பி(ம)சிந)/2024, நாள் 28.10.2024 மற்றும் பணியிட பேரேடு எண். 202410PSL0157ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1186(ஆயிரத்து நூற்று எண்பத்து ஆறு) (IFHRMS ASL No.2024101186).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை - 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை - 5.
மாநில கணக்காயர், சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1), சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 2), சென்னை-18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-5.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
நிதி (பி.மி.பி(ம)சிந)/வ.செ.பொதுI/ வ.செ.பொதுII/ வ.வ.I/மை.ம.ஆ.பி)த்துறை, சென்னை – 9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு/உபரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு** அலுவலர்.

## இணைப்பு-I

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2)த் துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு.)

**19 பள்ளி விடுதிகளை 19 கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்துதல் விவரம்**

| வ.எண் | தரம் உயர்த்தப்பட வேண்டிய பள்ளி விடுதியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | கல்லூரி விடுதியாக தரம் உயர்த்திய பின் அமைய உள்ள விடுதியின் பெயர் | கல்லூரி விடுதியாக தரம் உயர்த்திய பின் கோரும் ஒப்பளிப்பு மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, குடியாத்தம், வேலூர் மாவட்டம் | 60 | பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம், வேலூர் மாவட்டம் | 100 |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம் | 50 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம் | 100 |
| 3. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம் | 55 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, புஜங்கனூர்,கோயம்புத்தூர் மாவட்டம் | 100 |
| 4. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | 50 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | 100 |
| 5. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, அவல்பூந்துறை, ஈரோடு மாவட்டம் | 50 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, அந்தியூர், ஈரோடு மாவட்டம் | 100 |
| 6. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். | 80 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். | 100 |
| 7. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் | 65 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, மொடக்குறிச்சி ஈரோடு மாவட்டம். | 100 |
| 8. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, | 50 | பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்ப கல்லூரி | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலப்பாளையம், திருநெல்வேலி மாவட்டம் | | மாணவர் விடுதி, மேலப்பாளையம், திருநெல்வேலி மாவட்டம் | |
| 9. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி, வேளாங்கண்ணி, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, வேளாங்கண்ணி நாகப்பட்டினம் மாவட்டம் | 100 |
| 10. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, தோப்புத்துறை நாகப்பட்டினம் மாவட்டம் | 100 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, தோப்புத்துறை நாகப்பட்டினம் மாவட்டம் | 100 |
| 11. | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, திருவெறும்பூர், திருச்சி மாவட்டம். | 100 | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருவெறும்பூர், திருச்சி மாவட்டம். | 100 |
| 12. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி, சின்னக்காம்பட்டி, திருப்பூர் மாவட்டம். | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, மண்ணரை, திருப்பூர் மாவட்டம் | 100 |
| 13. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | 100 |
| 14. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, கீழ்பென்னத்தூர், திருவண்ணாமலை மாவட்டம். | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருவண்ணாமலை நகரம், திருவண்ணாமலை மாவட்டம். | 100 |
| 15. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, ஒடக்கல் பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம் | 75 |
| 16. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை மாவட்டம் | 50 |
| 17. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, பூம்புகார், மயிலாடுதுறை மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, பூம்புகார், மயிலாடுதுறை மாவட்டம் | 75 |
| 18. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, மதுராமங்கலம், காஞ்சிபுரம் மாவட்டம் | 25 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, குன்றத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | சீர்மரபினர் நல பள்ளி மாணவர் விடுதி, பாளையங்கோட்டை திருநெல்வேலி மாவட்டம் | 50 | சீர்மரபினர் கல்லூரி மாணவர் விடுதி, பாளையங்கோட்டை திருநெல்வேலி மாவட்டம் | 100 |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

28/11/2024
பிரிவு அலுவலர்.

## இணைப்பு-II

(அரசாணை (நிலை) எண். 90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

10 இடைநிலை காப்பாளர் பணியிடங்களை போதக காப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்படும் விடுதிகளின் விவரம்

| பள்ளி விடுதிகளில் உள்ள இடைநிலை காப்பாளர் பணியிடங்களின் விவரம் | | | | போதக காப்பாளராக தரம் உயர்த்தி வழங்க வேண்டிய கல்லூரி விடுதிகளின் விவரங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | பள்ளி விடுதிகளின் விவரம் | இடைநிலை காப்பாளர் பணியிட எண்ணிக்கை | மாவட்டம் | கல்லூரி விடுதிகளின் விவரங்கள் | தரம் உயர்த்தப்பட வேண்டிய போதக காப்பாளர் பணியிட எண்ணிக்கை |
| 1. | வேலூர் | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, குடியாத்தம். | 1 | வேலூர் | பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில் நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம். | 1 |
| 2. | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, ஆனைமலை. | 1 | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, புஜங்கனூர். | 1 |
| 3. | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம். | 1 | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம். | 1 |
| 4. | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, சத்தியமங்கலம். | 1 | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சத்தியமங்கலம் | 1 |
| 5. | திருநெல்வேலி | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, மேலப்பாளையம். | 1 | திருநெல்வேலி | பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில் நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, மேலப்பாளையம் | 1 |
| 6. | அரியலூர் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, உடையார்பாளையம். | 1 | அரியலூர் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, ஜெயங்கொண்டம். | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | மயிலாடுதுறை | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, தரங்கம்பாடி. | 1 | மயிலாடுதுறை | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, பூம்புகார் | 1 |
| 8. | மயிலாடுதுறை | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, பூம்புகார். | 1 | மயிலாடுதுறை | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, பூம்புகார். | 1 |
| 9. | காஞ்சிபுரம் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, மதுரமங்கலம். | 1 | காஞ்சிபுரம் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, குன்றத்தூர். | 1 |
| 10. | திருநெல்வேலி | சீர்மரபினர் நல பள்ளி மாணவர் விடுதி, பாளையங்கோட்டை | 1 | திருநெல்வேலி | சீர்மரபினர் நல கல்லூரி மாணவர் விடுதி, பாளையங்கோட்டை | 1 |
| | மொத்தம் | | 10 | மொத்தம் | | 10 |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

பிரிவு அலுவலர்.

<u>இணைப்பு-III</u>

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிற1(2))த் துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

புதிதாகத் தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் மற்றும் விடுதிகளின் விவரம்

| வ. எண் | மாவட்டம் | விடுதியின் பெயர் | சமையலர் (நிலை-1) (ரூ.15700-58100) | காவலர் / ஏவலர் (நிலை-1) (ரூ.15700-58100) |
|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, புஜங்கனூர். | — | 1 |
| 2. | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, அவல்பூந்துறை. | — | 1 |
| 3. | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, மொடக்குறிச்சி. | — | 1 |
| 4. | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருவண்ணாமலை | — | 1 |
| 5. | கோயம்புத்தூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, வால்பாறை. | — | 1 |
| 6. | மயிலாடுதுறை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, தரங்கம்பாடி. | — | 1 |
| 7. | காஞ்சிபுரம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, குன்றத்தூர். | 1 | — |
| **மொத்தம்** | | | **1** | **6** |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

பிரிவு அலுவலர்.

## இணைப்பு-IV

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

### 5 சமையலர், 2 காவலர் (ம) ஏவலர் ஆகிய பணியிடங்கள் சரண் செய்யப்படும் விவரம்

| வ. எண் | மாவட்டம் | விடுதியின் பெயர் | சமையலர் | காவலர் (ம) ஏவலர் |
|---|---|---|---|---|
| 1. | கரூர் | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, கரூர் | 1 | 1 |
| 2. | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி காவிலிப்பாளையம். | 1 | 1 |
| 3. | கோயம்புத்தூர் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, பெத்திக்குட்டை | 1 | 0 |
| 4. | இராணிப்பேட்டை | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி, அரக்கோணம். | 2 | 0 |
| மொத்தம் | | | 5 | 2 |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

(கையொப்பம்) 29/10/2024
**பிரிவு அலுவலர்.**

(கையொப்பம்) 29/10/24

<u>இணைப்பு-V-A</u>

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

| பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி விடுதிகள் நிலை உயர்த்துதல் தொடர் செலவினம் | | |
|---|---|---|
| வ.எண் | பொருட்கள் | 11 விடுதிகளுக்கான செலவின தொகை ரூ. |
| 1. | உணவுக் கட்டணம் | 65,82,000 |
| 2. | சிறப்பு உணவுக் கட்டணம் | 2,98,000 |
| 3. | பல்வகை கட்டணம். | 9,40,000 |
| 4. | தொலைப்பேசி கட்டணம் ஒரு வருடத்திற்கு (ரூ.740 X12X11) | 97,680 |
| 5. | DTH இணைப்பு ஒரு வருடத்திற்கான செலவு (ரூ.2400x11) | 26,400 |
| 6. | 5 இடை நிலை காப்பாளர் பணியிடம் போதக காப்பாளராக தரம் உயர்த்துவதால் ஏற்படும் செலவினம் (5,26,200X5) | 26,31,000 |
| 7. | புதிய பணியிடம் (3 இரவு காவலர் மற்றும் ஏவலர்) ஆண்/பெண் (5,52,600X3) | 16,57,800 |
| மொத்தம் | | 1,22,32,880 |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

பிரிவு அலுவலர்.

இணைப்பு-V-B

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி விடுதிகள் நிலை உயர்த்துதல்

தொடரா செலவினம்

| வ. எண் | பொருட்கள் | ஒரு விடுதிக்கான செலவின தொகை ரூ. | 11 விடுதிகளுக்கான மொத்த செலவின தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி (43" LED) | 40,000 | 40,000 (ஒரு விடுதிக்கு மட்டும்) |
| 2. | செம்மொழி நூலகம் | 50,000 | 5,50,000 |
| 3. | மின் நூலகம் | 80,000 | 8,80,000 |
| 4. | CCTV கேமரா | 1,00,000 | 5,00,000 (5 விடுதிகளுக்கு மட்டும்) |
| 5. | தொலைப்பேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம். | 5,000 | 55,000 |
| 6. | சுகாதார குட்டைத் தகனி | 25,000 | 50,000 (2 விடுதிகளுக்கு மட்டும்) |
| 7. | ஜமக்காளம் (ஒப்பளிப்பு கோரும் மாணவர்/மாணவியர் எண்ணிக்கையில் 100X Rs.496 = 49,600) | 49,600 | 5,45,600 |
| | மொத்தம் | 3,49,600 | 26,20,600 |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

பிரிவு அலுவலர்.

29/10/24

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

இணைப்பு-V.C

மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி விடுதிகள் நிலை உயர்த்துதல்
தொடர் செலவினம்

| வ. எண் | பொருட்கள் | 7 விடுதிகளுக்கான செலவின தொகை ரூ. |
|---|---|---|
| 1. | உணவுக் கட்டணம் | 29,12,000 |
| 2. | சிறப்பு உணவுக் கட்டணம் | 1,55,000 |
| 3. | பல்வகை கட்டணம் | 5,00,000 |
| 4. | தொலைப்பேசி கட்டணம் ஒரு வருடத்திற்கு (740 x 12 x 7) | 62,160 |
| 5. | DTH இணைப்பு ஒரு வருடத்திற்கான செலவு (2400x7) | 16,800 |
| 6. | 4 இடை நிலை காப்பாளர் பணியிடம் பட்டதாரி காப்பாளராக தரம் உயர்த்துவதல் ஏற்படும் செலவினம் | 21,04,800 |
| 7. | புதிய பணியிடம் (3 இரவு காவலர் மற்றும் ஏவலர்) ஆண்/பெண் (552600x3) | 16,57,800 |
| 8 | புதிய பணியிடம் (1 சமையலர்) ஆண்/பெண் (5,52,600 x1) | 5,52,600 |
| | மொத்தம் | 79,61,160 |

சா.விஜயராஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

இணைப்பு-V-D

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி விடுதிகள் நிலை உயர்த்துதல்
தொடராச் செலவினம்

| வ. எண் | பொருட்கள் | ஒரு விடுதிக்கான செலவின தொகை ரூ. | 7 விடுதிகளுக்கான மொத்த செலவின தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி | 40,000 | 80,000 (2 விடுதிகளுக்கு மட்டும்) |
| 2. | செம்மொழி நூலகம் | 50,000 | 3,50,000 |
| 3. | மின் நூலகம் | 80,000 | 5,60,000 |
| 4. | CCTV கேமரா | 1,00,000 | 3,00,000 (3 விடுதிகளுக்கு மட்டும்) |
| 5. | தொலைப்பேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம். | 5,000 | 35,000 |
| 6. | ஜமக்காளம் (7 மிபிவ விடுதிகளுக்கு ஒப்பளிப்பு கோரும் மாணவர்/மாணவியர் எண்ணிக்கையில் 550 X Rs.496 = 272800) | ---- | 2,72,800 |
| | மொத்தம் | | 15,97,800 |

சா.விஜயராஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

இணைப்பு-V-E

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

சீர்மரபினர் நல பள்ளி விடுதி நிலை உயர்த்துதல்

தொடர் செலவினம்

| வ.எ | பொருட்கள் | செலவின தொகை ரூ. |
|---|---|---|
| 1. | உணவுக் கட்டணம் | 8,02,000 |
| 2. | சிறப்பு உணவுக் கட்டணம் | 30,000 |
| 3. | பல்வகை கட்டணம் | 1,00,000 |
| 4. | தொலைப்பேசி கட்டணம் ஒரு வருடத்திற்கு (740 x 12 x 1) | 8,880 |
| 5. | DTH இணைப்பு ஒரு வருடத்திற்கான செலவு (2400x 1) | 2,400 |
| 6. | 1 இடை நிலை காப்பாளர் பணியிடம் பட்டதாரி காப்பாளராக தரம் உயர்த்துவதல் ஏற்படும் செலவினம் (5,26,200 x 1) | 5,26,200 |
| | மொத்தம் | 14,69,480 |

சா.விஜயராஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

இணைப்பு-V-F

(அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 28.10.2024-ன் இணைப்பு)

சீர்மரபினர் நல பள்ளி விடுதி நிலை உயர்த்துதல்

தொடரச் செலவினம்

| வ. எண் | பொருட்கள் | மொத்த செலவின தொகை ரூ. |
|---|---|---|
| 1. | செம்மொழி நூலகம் | 50,000 |
| 2. | மின் நூலகம் | 80,000 |
| 3. | தொலைப்பேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம் | 5,000 |
| 4. | ஜமக்காளம் (ஒப்பளிப்பு கோரும் மாணவர்/மாணவியர் எண்ணிக்கையில் 100X Rs.496 = 49,600) | 49,600 |
| | மொத்தம் | 1,84,600 |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

பிரிவு அலுவலர்.